**தலைப்பு - 001 அதிமேதகு சனாதிபதி**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 001 அதிமேதகு சனாதிபதி செலவினத் தலைப்பின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி செலவினத் தலைப்பின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி செலவினத் தலைப்பிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிமேதகு சனாதிபதி செலவினத் தலைப்பின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

### 2.1.1 மதிப்பீடு தயாரித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 18 செலவின விடயங்களில் போதியளவான பிரகாரம் வருடாந்த நிதிஏற்பாடு வழங்கப்படாமையினால் ஆரம்ப நிதிஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 760 சதவீதம் வரையிலான அளவில் நிதிப் பிரமாணம் 66/99 இன் மூலம் மாற்றப்பட்டு கூட்டுமொத்தமாக ரூபா 448,132,000 நிதிஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்தது. | அதிமேதகு சனாதிபதியின் 2022 ஆம் ஆண்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமை, காகிதாதிகளின் விலைகள் விரைவாக உயர்வடைந்தமை, இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளின் விலைகள் உயர்வடைந்து சென்றமை, பதவிநிலை உத்தியோகத்தர்களினால் போக்குவத்து படிகள் கோரியமை, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களின் விலைகள் விரைவாக உயர்வடைந்து | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டை இயலுமான வரை சரியாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சென்றமை, அலுவல வளவை அபிவிருத்தி செய்வதற்காக காணப்படுகின்ற நிதிஏற்பாடு போதியளவில் இல்லாதிருந்தமை, இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் விலைகள் விரைவாக உயர்வடைந்தமை, வாகன உதிரிப்பாகங்களின் விலைகள் விரைவாக உயர்வடைந்தமை, சனாதிபதி அலுவலகத்தை சுற்றி பாதுகாப்பு வேலியினை மீண்டும் நிர்மாணிக்க வேண்டி ஏற்பட்டமை மற்றும் தளபாட பொருட்கள் அலுவலக உபகரணங்களின் விலைகள் எதிர்பார்த்த மதிப்பீட்டை விஞ்சியிருந்தமை, முன்னாள் சனாதிபதி விதவை மனைவிக்காக வாகனத்தை அபிவிருத்தி செய்வதற்காக நிதிஏற்பாடு போதியளவில் இல்லாதிருந்தமை முன்னாள் சனாதிபதிகளுக்கு தேவையான வசதிகள் மற்றும் வாகனங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையினால் மிகை நிதி ஏற்பாட்டுடன் செலவின விடயங்களில் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டு தேவையான செலவினங்கள் செய்யப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 02 செலவின விடயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 20,000,000 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிற்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66/69 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களில் இரண்டு செலவினங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 16,925,000 இனால் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்ட | இந்த செலவினங்கள் இரண்டும் அதிமேதகு சனாதிபதியின் விடயப் பரப்பிற்கு கொண்டுவரப்பட்ட சில விடயங்கள் மற்றும் தேவைகள், மிகவும் அவசரமான, காலந்தாத்த முடியாத விடயங்களாக இருந்தமையால் அவற்றை அந்த சந்தர்ப்பத்தின் போது நிறைவேற்றுவதற்கு ஏற்பட்டிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பத்தின் போது பின்னர் தீர்க்கும் அடிப்படையில் அல்லது அடுத்து வரும் ஆண்டின் நிதி | வருடாந்த மதிப்பீட்டை இயலுமானவரை சரியாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | |
|---|---|
| போதிலும், செலவினம் ரூபா 19,089,696 ஆனமையால் ஆரம்ப மதிப்பீட்டு நிதிஏற்பாட்டின் செலவினங்களேனும் செலவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்பாடுகளில் செலவினங்களை செய்யும் அடிப்படையில் உரிய சேவைகளை நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 2.1.2 நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு செலவின விடயங்கள் முறையே ரூபா 1,000,000 மற்றும் ரூபா 300,000 தேறிய நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் போது எந்தவொரு செலவினமும் இன்றி முழுமையான நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | முன்னாள் சனாதிபதியின் விதவை மனைவிக்காக வசதிகளை வழங்குதவதற்கு மேற்கூறப்பட்ட நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், உரிய தரப்பினரால் கோரிக்கை சமர்ப்பிக்காமையினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வரையரையின் காரணமாக எதிர்பார்த்த பிரகாரம் செலவினங்கள் எழாதிருந்தமையினால் இந்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த மதிப்பீட்டை இயலுமானவரை சரியாக மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | 12 செலவின விடயங்களுக்காக கூட்டுப்பெறுமதி ரூபா 388,396,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் 33 சதவீதம் முதல் 93 சதவீத்திற்கு இடையிலான அளவில் நிதிஏற்பாடு ஏனைய செலவின | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் உருவாகாமை, வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்கள் மீள கையளிக்கப்பட்டமை, முன்னாள் சனாதிபதி ஒருவருக்கான நிதி | வருடாந்த மதிப்பீட்டை இயலுமானவரை சரியாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | |
|---|---|
| விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66/69 இன் மூலம் மாற்றப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளில் எதிர்பார்த்த பிரகாரம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை, முன்னாள் சனாதிபதியின் விதவை மனைவிற்காக நிதி ஏற்பாடுகளில் எதிர்பார்த்த பிரகாரம் கோரிக்கை சமர்ப்பிக்கப்படாமை, சனாதிபதி ஆணைக்குழுவிற்கான நிதி ஏற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் எழாமை, தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கான நிதி ஏற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் எழாதிருந்தமை மற்றும் தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றிக்கை 03/2022 இன் பிரகாரம் கட்டிட நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் சேமிக்கப்பட்ட நிதிஏற்பாடு குறைவான செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்தல், சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஒட்டுமொத்த | 2020 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமை, நாடு மூடப்பட்டமை மற்றும் அரச நிறுவனங்களின் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பதவியணியினருக்காவும் செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடல், சகல அங்கத்தவர்களுக்காகவும் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலயத்திற்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்றை வழங்குதல், இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக சிரேஸ்ட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு அந்த உத்தியோகத்தருக்கு மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை கையளித்தல் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பணிப்பொறுப்புக்களில் ஆகக் குறைந்த ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நடாத்திச் செல்லப்பட்டமை, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வரையரையான நிலைமையின் அடிப்படையில் ஊழியர்கள் சுழற்சி முறையில் சேவைக்கு அழைக்கப்பட்டமை மற்றும் சனாதிபதி செயலகத்தை கேந்திரமாக கொண்டு நடைபெற்ற போராட்ட நடவடிக்கைகளினால் அத்தியவசதிய சேவை நடவடிக்கைகள் ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கை மூலம் நடாத்திச் செல்லப்பட்டமையால் பயிற்சி செலவின தலைப்பின் கீழான சகல நிதிஏற்பாடுகளும் பயிற்சிகளுக்காக செலவிட முடியாதிருந்தமையும், மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 6.1 மற்றும் 6.3 இன் பிரகாரம் நிறுவனத்தின் பதவியணியினர் ஒவ்வொருவருக்காவும் 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்று வழங்குதற்கு முடியாதிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் | இழப்பு தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லக்கட்டிருக்கவில்லை. | இழப்பு நட்ட பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அது நாளது வரையாக்கப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் இழப்பு தொடர்பான பதவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 880, 891(1) மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிப் பிரமாணம் 315(1) | பிணை வைக்கவேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ,பிணை வைப்பதற்கு தேவையான சகல உத்தியோகத்தர்களின் பெயர்களை உள்ளடக்கிய பிணை பதிவேடு ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பிரதான அலுவலகத்தை மிகவும் முறைமைப்படுத்தும் வகையில் திட்டமொன்றை தயாரித்து நடாத்திச் செல்லப்பட | பிணை வைப்பதற்கு தேவையான சகல உத்தியோகத்தர்களின் பெயர்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு ஒன்றை பேணிச் செல்லும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அதனை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணையினை பெற்று பதிவேடுகளுக்கு கொண்டு வரல் வேண்டும். |

வேண்டிய போதிலும் சனாதிபதி அலுவலகத்தில் பிணைப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் மிகவும் சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்காமையின் காரணமாக 42 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 4,537,000 செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்ட பணிகள் பூர்த்தி அடைந்ததன் பின்னர் கூட்டுமொத்தமாக ரூபா 1,878,493 பணமாக மீள தீர்க்கப்பட்டிருந்ததுடன், அது பெறப்பட்ட முற்பண தொகையில் 41.4 சதவீதம் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த முற்பணத்தை முறையான அங்கீகாரத்தின் கீழ் பெற்றுள்ளதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் பிரகாரம் இந்த முற்பணத் தொகை பெறப்பட்டிருந்ததுடன், மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விட குறைந்த கிரயத்தில் உரிய விடயங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான அடிப்படையில் சேமிக்கப்பட்ட பணம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | செலவினங்களை சரியாக மதிப்பீடு செய்து உப கட்டுநிதி வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 371(4) இன் பிரகாரம் குறித்துரைத்த மற்றும் தேவையற்ற பணிகளுக்காக உப கட்டுநிதி வழங்க முடியாதிருந்த போதிலும், 19 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 1,464,120 கட்டுநிதி வழங்கப்பட்டு அந்த தொகை எந்தவொரு பணிகளுக்கும் ஈடுபடுத்தப்படாமல் 01 முதல் 43 நாட்களுக்கு இடையிலான காலம் | இந்த முற்பண தொகை முறையான அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் பிரகாரம் முற்பணத் தொகை வழங்கப்பட்டுள்ளதுடன், முற்பணம் பெற்ற பணிகள் இரத்துச் செய்யப்பட்டமை அல்லது உரிய விடயங்களை நிறைவேற்றுவதற்கு தேவையற்றிருந்ததன் காரணமாக முற்பண | தேவையினை இனங்கண்டு உப கட்டுநிதி வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையில் வைத்திருந்து மொத்த முற்பண தொகையும் மீண்டும் பணமாக தீர்க்கப்பட்டிருந்தது. அதனிடையே காசாக பெற்ற ரூபா 50,000 முற்பணம் காசோலை மூலம் தீர்க்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | தொகை மீண்டும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கு**

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து 4 – 5 வருடங்களுக்கு இடையிலான காலம் முதல் நிலுவையாக காணப்படுகின்ற இடர் கடன் ரூபா 99,140 மற்றும் விழா முற்பணம் ரூபா 8,000 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 107,140 கடன் தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மரணமடைந்த சாரதி அவர்களின் 2022.12.31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய இடர் கடன் மீதி ரூபா 91,140 ஆக இருந்தமையும் நிலுவை கடன் மீதி தற்போது பிணையாளரிடம் இருந்து அறவிடப்படுகின்றதுடன், தற்போது காணப்படுகின்ற கடன் மீதி ரூபா 84,260 வரை குறைக்கப்பட்டிருந்தமையும் அவரிடம் இருந்து நிலுவை விழா முற்பண மீதி 2022.12.31 இல் உள்ளவாறு ரூபா 8,000 ஆகும். விழா முற்பண மீதியை செலுத்துவதற்கு மரணமடைந்த கடன்காரரின் மனைவியினால் இணங்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஓய்வுபெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்குள்ள 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற முறையே ரூபா 144,768 ஆன ஆதனக் கடன் மீதி மற்றும் ரூபா 114,655 ஆன இடர் கடன் மீதி என்பன மீளாய்வாண்டு வரை அறவிடப்படாமல் காணப்பட்டது. | ஓய்வூதிய உறுப்புரை கோவையின் 2 – 7 ஆம் பிரிவின் கீழ் பதவி கலைக்கப்பட்டதன் அடிப்படையில் ஓய்வு பெற்றுச் சென்றதன் பிரகாரம் கடனாளிக்கு உரித்தாகின்ற ஓய்வூதிய பணிக்கொடை தயாரிக்கும் நடவடிக்கைகள் காணப்படுகின்றமையும் ஓய்வூதிய பணிக் கொடைக்குரிய நிதி ஏற்பாடு ஓய்வூதிய திணைக்களத்தில் இருந்து வழங்கப்பட்டதன் பின்னர் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் கடன் மீதியை தீர்த்து வைக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதிய உறுப்புரையின் 02 மற்றும் 15 ஆம் பிரிவுகளின் பிரகாரம் செயற்திறன் அற்றதன் அடிப்படையில் ஓய்வுபெறச் செய்யப்பட்டதற்காக அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் தேவையான இருந்ததாக ஓய்வூதிய திணைக்களத்தில் இருந்து அறிவிக்கப்பட்டதன் காரணமாக அந்த நடவடிக்கைக்காக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஓய்வுபெறச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த ஊழியருக்கு கிடைக்க வேண்டிய பணிக் கொடைக்காக நிதி ஏற்பாடு ஓய்வூதிய திணைக்களத்தில் இருந்து வழங்கப்பட்டதன் பின்னர் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் நிலுவை | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீதியை தீர்த்து வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | வேலை நீக்கத்திற்கு உட்பட்ட மூன்று உத்தியோகத்தர்களுக்கு உரிய மூன்று வருடங்களுக்கும் ஐந்து வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 257,927 இடர் கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வேலை நீக்கம் செய்யப்பட்ட சாரதி இருவரிடம் இருந்து 2021.12.31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய இடர் கடன் மீதியின் கூட்டுமொத்தம் ரூபா 150,786 ஆகும். இந்த நிலுவை கடன் மீதியில் இரண்டும் தற்போது பிணையாளர்களிடம் இருந்து அறவிடப்படுகின்றதுடன், தற்போது காணப்படுகின்ற நிலுவை மீதி ரூபா 137,614 வரையில் குறைக்கப்பட்டுள்ளதுடன், வேலை நீக்கம் செய்யப்பட்ட சாரதி அவர்களிடம். 2021.12.31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய இடர் கடன் மீதி ரூபா 107,141 தொகை அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கின்ற கடனாளியின் மனைவியிடம் இருந்து தற்போது அறவிடப்படுகின்றமையும் நிலுவை கடன் மீதி ரூபா 96,925.47 வரை குறைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சேவையை விட்டுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து 03 மாதம், 01 வருடத்திற்கும் 5 வருடத்திற்கும் இடையில் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 1,054,444 நிலுவை கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணையாளர்களிடம் இருந்து மாதாந்த சம்பளத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல், கடனை அறவிடுவதற்காக கலந்துரையாடல்களை நடாத்துதல், சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்ட மா அதிபருக்கு கோரிக்கை விடல், கடனை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இருந்து | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல திணைக்கள தலைவர்களினாலும், தமது நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை அமுல்படுத்துவதற்காக குறித்துரைத்த நிதியாண்டிற்காக உரிய ஆண்டிற்கு நாளது வரையாக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையில் இருக்கின்ற பதவியணியினர் தொடர்பான தகவல்கள், அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம், அமுல்படுத்துகின்ற கால அட்டவணை மற்றும் அந்த செயற்பாடுகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி/ விளைவுகள், வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைத் திட்டம், உள்ளக கணக்காய்வு திட்டம் போன்ற விடயங்களை உள்ளடக்கி வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்க | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட நிலைமையின் அடிப்படையில் அரச ஊழியர்களை சுழற்சி முறையில் சேவைக்கு அழைத்தல், அத்தியவசிய சேவை நடவடிக்கைகளுக்காக ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கை மூலம் நடாத்திச் செல்லப்பட்டதன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன், 2022 இன் இரண்டாம் அரையாண்டில் சனாதிபதி அலுவலகத்தில் ஏற்பட்ட நிர்வாக ரீதியான மாற்றங்களின் பின்புலத்தில் மீண்டும் முறையான பிரகாரம் பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பிரிவுகள் தொடர்பாக திட்டங்களை தயாரிப்பதற்காக சில மாதங்கள் எடுத்தமையால் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் கீழ் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 13 இன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக மூலதன சொத்துக்கள் கைப்பற்றல்களுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 176,920,000 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 149,143,452 செலவிடப்பட்டிருந்த போதிலும், பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட நிலைமையின் அடிப்படையில் அரச ஊழியர்களை சுழற்சி முறையில் சேவைக்கு அழைத்தல், அத்தியவசிய சேவை நடவடிக்கைகளுக்காக ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கை மூலம் நடாத்திச் செல்லப்பட்டதன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன், 2022 இன் இரண்டாம் அரையாண்டில் சனாதிபதி அலுவலகத்தில் ஏற்பட்ட நிர்வாக ரீதியான மாற்றங்களின் பின்புலத்தில் மீண்டும் முறையான பிரகாரம் பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு ஏற்பட்டிருந்தது. அந்த நடவடிக்கைகளுக்காக சில மாதங்கள் எடுத்தமையால் 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு முடியாதிருந்ததுடன், அவசர | அரச நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மற்றும் அத்தியவசிய கொள்வனவுகள் சந்தர்ப்பங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.1.3 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்காமையின் காரணமாக நிறுவனத்தின் செயலாற்றலை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட வரையறுக்கப்பட்ட நிலைமையின் அடிப்படையில் அரச ஊழியர்களை சுழற்சி முறையில் சேவைக்கு அழைத்தல், அத்தியாவசிய சேவை நடவடிக்கைகளுக்காக ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கை மூலம் நடாத்திச் செல்லப்பட்டதன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன், 2022 இன் இரண்டாம் அரையாண்டில் சனாதிபதி அலுவலகத்தில் ஏற்பட்ட நிர்வாக ரீதியான மாற்றங்களின் பின்புலத்தில் மீண்டும் முறையான பிரகாரம் பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பிரிவுகள் தொடர்பாக திட்டங்களை தயாரிப்பதற்காக சில மாதங்கள் எடுத்தமையால் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் | செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திட்டத்தை தயாரிப்பதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட ACA - 6 நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2022 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப மீதியில் ரூபா 47,529,618 தொகை நிதியல்லா சொத்துக்களில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு விபரம் மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ACA - 6 நிதியல்லா சொத்துக்களில் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 47,529,618 தொகை மீதியாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் சனாதிபதி மாளிகையில் இருந்து மூலப் பொருட்களை பயன்படுத்தி வடிவமைக்கப்படுகின்ற லதுவ, சிகாஸ் தரவு முறைமையில் நிதியல்லா சொத்துக்களான அடிப்படையில் ஆண்டில் உள்ளடக்கப்படாதிருந்த சொத்துக்களாகும். அதனால் அந்த சொத்துக்களின் ஆரம்ப மீதியாக சிகாஸ் தரவு முறைமையில் நேரடியாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், திறைசேரி நாட்குறிப்புக்கள் ஊடாக உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் அல்லாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியல்லா சொத்துக்களின் மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் தெளிவாக இனங்காணக் கூடிய வகையில் பதிவேடுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் விகாரைகளுக்காக விடுவிக்கப்பட்ட 116 வாகனங்களின் பதிவு உரித்து விடுவித்துக் கொள்வதற்கான ஆவணங்கள் ஒரு ஆண்டிற்கு முன்னர் கையளிக்கப்பட்டிருந்த போதும், 2023 ஏப்ரல் மாதம் வரை பதிவு உரித்து கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் BDN-4409, BDN-4412, DAD-1180, KB-9985 மற்றும் PH-2913 என்ற வாகனங்களின் கையளித்தல் நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இலக்கம் RW-6953 என்ற வாகனத்தை கையளிக்கும் நடவடிக்கைகளுக்காக உரிய ஆவணங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், | பதிவு உரித்தை முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை அல்லது மீண்டும் கையேற்றல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏனைய வாகனங்களின் பதிவு உரித்தை முறையாக கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தொடர்ந்தும் உரிய நிறுவனத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | பௌதீக இருப்பை வெளிப்படுத்தி கொள்வதற்கு முடியாதிருந்த சனாதிபதி செயலாகத்திற்குரிய 51 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இருப்பினை உறுதிப்படுத்துவதற்கு தவறியிருந்தது. இந்த வாகனங்களின் பெறுமதியேனும் கண்டறிவதற்கு முடியாதிருந்தது. | இந்த வாகனங்களின் பௌதீக இருப்பை வெளிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், 51 வாகனங்களுக்கு இடையே 28 வாகனங்களின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மோட்டார் போக்குவரத்து திணைகக்களம், மாகான மோட்டார் போக்குவரத்து திணைக்களம், காப்புறுதி நிறுவனம், ஊழுவெசழடநச நாயகம் திணைக்களம் மற்றும் இலங்கை பொலிஸை தொடர்பு படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் பௌதீக இருப்பை வெளிப்படுத்திக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற 24 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற 24 வாகனங்களுக்கு இடையே 05 வாகனங்களை விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும், 16 வாகனங்களுக்குரிய விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், ஏனைய 03 வாகனங்களுக்குரிய விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சனாதிபதி அலுவலகத்திற்குரிய 28 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட வாகனங்களுக்கு இடையே 13 வாகனங்கள் அதிக பாதுகாப்பு வாகனங்களாக இருந்தமையால் கிரயத்தை கவனத்தில் கொண்டு காப்புறுதி செய்யப்படாததாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த 13 வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அதிக பாதுகாப்பு மற்றும் அதனோடு ஒத்த வாகனங்களை காப்பீடு செய்யும் வாகனத்தின் மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் ஆகக் கூடிய காப்புறுதி தவணைப் பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதிக பாதுகாப்புள்ள ஒரு வாகனத்தின் மதிப்பீட்டு பெறுமதி மாத்திரம் ரூபா 250 - 300 மில்லியன் அளவாக இருந்ததுடன், அந்த ஒரு வாகனத்தின் காப்புறுதிக்காக செலுத்த வேண்டிய வருடாந்த காப்புறுதி தவணைப் பணம் ரூபா 17 மில்லியனை விஞ்சியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நாட்டில் காணப்படுகின்ற சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் அல்லது அதற்கு புறம்பாக இருக்குமாயின் அந்த தேவையினை வழங்குவதற்கு மாற்று கொள்கை தீர்மானமொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தால் தற்காலிக அடிப்படையில் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான 52 வாகனங்கள் பெறப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்ட போதிலும், 66 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் இல்லாமையின் காரணமாக சில வாகனங்கள் சனாதிபதி அலுவலகத்திற்கு பெறப்பட்ட திகதியையும் கண்டறிய முடியாதிருந்தது. இந்த வாகனங்களுக்கு மீளாய்வாண்டிற்காக மீளாய்வாண்டில் ரூபா 28,802,245 பராமரிப்பு செலவினமாக சனாதிபதி அலுவலகத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது சட்ட ரீதியான உரித்து ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான வாகனங்கள், சனாதிபதி செயலகத்தின் பயன்பாட்டிற்காக பெற்றுக்கொள்ளும் போது தற்காலிகமாக வழங்குதல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், வாகனங்களின் சட்டரீதியான உரித்தை கையேற்றல் ஏனைய நிறுவனங்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதாகவும் தற்போது அவ்வாறு இணங்கப்பாடு பெறப்பட்ட வாகனங்களின் சட்டரீதியான உரித்தை கையேற்கும் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுவதாகவும், சனாதிபதி அலுவலகத்தின் கடமை நடவடிக்கைகளுக்காக ஏனைய நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட வாகனங்களை சட்டரீதியாக கையளித்தல் இடம்பெறாத போதும் பராமரிப்பு நடவடிக்கைகள் சனாதிபதி | பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் சட்ட ரீதியான உரித்தை கையேற்றல் மற்றும் முறையான திட்டத்தின் பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்கள் ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்காக வழங்கப்பட்டிருந்த போதும், அவ்வாறு வழங்கும் போது நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இடையூறு இல்லாத வகையில் மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் முறையான அங்கீகாரத்துடன், முறையான திட்டத்துடன் வாகனங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கையளிக்கப்பட்ட வாகனங்களில் 12 வாகனங்கள் விடுவிக்கப்பட்ட திகதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. சனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான 53 வாகனங்கள் ஏனைய அரசாங்க நிறுவனங்கள், விகாரைகள், மதகுருமார்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனங்களுக்கு இடையே 27 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13,695,119 பராமரிப்பு செலவினம் செய்யப்பட்டிருந்த போதும் அந்த செலவினங்களை மீளளிப்பு செய்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களின் கடமை தேவையின் அடிப்படையில் தற்காலிக அடிப்டையில் வழங்கப்பட்டிருந்ததுடன், சட்ட ரீதியாக கையளிப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இலக்கம் KD-6312 மற்றும் KV-0281 என்ற இரண்டு வாகனங்களையும் சட்ட ரீதியாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய நிறுவனங்களுக்கு வாகனங்களை வழங்கும் போது சட்டரீதியான உரித்தை கையளித்தல் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களின் போது மற்றும் அரசாங்க கடமை தேவையின் அடிப்படையில் மாத்திரம் வாகனங்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பராமரிப்பு கிரயம் சனாதிபதி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரம் மற்றும் திட்ட முறைமையில் வாகனங்களை கையளிப்பதற்கோ அல்லது பயன்பாட்டிற்கு விடுவித்தலோ மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட கலவர நிலைமையின் போது சனாதிபதி செயலகம் மற்றும் கோட்டை சனாதிபதி மாளிகையின் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் வாகனங்களுக்கு ஏற்பட்ட கணக்காய்வு திகதியில் மதிப்பீடு செய்யப்பட்ட நட்டங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 36,675,854 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன். அது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் சனாதிபதி செயலகத்திற்கு, கோட்டை சனாதிபதி மாளிகை, பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் வாகனங்களுக்கு கலவரக்காரர்களினால் மேற்கொள்ளப்பட்ட இழப்புக்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தமையும் நட்டம் அல்லது இழப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் படி பரிசோதனைகளை நடாத்துவதற்காக 05 பேர்களுடைய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், நட்டம்/ இழப்புக்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளவதற்காக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த இழப்பு நட்டங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட செலவினம் மற்றும் இழப்பு நட்டங்களை பழுதுபார்த்தலுக்காக ஏற்பட்ட செலவினம் தொடர்பான விபரங்கள் சமர்பிக்கப்பட்ட போதும் இறுதி கணக்குகள் தயாரிக்கும் திகதி வரையிலும் சரியான விரிவான மதிப்பீட்டு அறிக்கை விலை மதிப்பீட்டு | இடம் பெற்ற இழப்பு நட்டம், நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்தில் இருந்து பெறப்படாமை, நிதிப் பிரமாணம் 104 பரிசோதனை முடிவடையாமை மற்றும் விசாரணை நடவடிக்கைகள் முடிவடையாமை என்பவற்றினால் 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் நட்ட இழப்பு தொடர்பான விபரங்கள், நட்டம் மற்றும் கைவிடலின் கீழ் வெளிப்படுத்தப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்குரிய இறுதி நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் கைவிடல்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நடைபெற்ற கலவர நிலைமையில் 22 வாகனங்களுக்கு நட்ட இழப்பு ஏற்பட்டிருந்த போதும் அந்த வாகனங்களில் 06 வாகனங்கள் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையும் பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல்கள் மதிப்பீட்டின் மூலம் காப்புறுதி கம்பனியால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகையில் இருந்து உரிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ள முடியாதிருந்ததாக பழுதுபார்த்தல் மேற்கொள்கின்ற நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தமையால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளும் தாமதமடைந்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும், காப்புறுதி இழப்பீட்டை மீளளிப்புச்செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் வருகின்ற புத்தகத்தில் இருந்து பதிவழித்தல் மற்றும் அறவிடல் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2014 முதல் 2022 காலப்பகுதிக்குரிய ரூபா 25,000 | அவசர விபத்துக்களுக்குரிய நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டத்தை கணிப்பிடல் மற்றும் விசாரணை நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கும், புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இற்கு குறைவான வாகன விபத்துக்களின் சம்பவங்கள் 51 மற்றும் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட வாகன விபத்துக்களின் சம்பவங்கள் 279 தொடர்பான நடவடிக்கைகள் முடிவடையாமையின் காரணமாக தொடர்ந்தும் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட 279 வாகன விபத்துக்களுக்கு இடையே 235 வாகனங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நட்ட பெறுமதியின் கூட்டுமொத்தம் ரூபா 54,442,331 ஆக இருந்ததுடன், 44 வாகனங்களின் நட்டம் இதுவரை கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.